அவர்கள் மறுக்காமல், இன்று தாங்கள் வெளிநடப்புச் செய்ததாகக் காட்டி, அது பத்திரிகையில் வரவேண்டும் என்பதற்காகச் சென்றிருக்கிறார்களேயொழிய, அந்தச் செய்தியை அவர்கள் ஒத்துக் கொண்டார்கள் என்றுதான் கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெளிநடப்புதான் செய்தார்களா, அல்லது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல, ஓட்டம் பிடித்தார்களா என்பதை அவர்கள்தான் வெளியே போய் விளக்கிக் கொண்டிருப்பார்கள்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(30.3.1994)* காலை *10.00* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-11 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

62. 1992-93 ஆம் ஆண்டிற்கான மேக்னசைட் நிறுவனத்தின் ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

63. 1992-93 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் இருபத்தியிரண்டாவது ஆண்டறிக்கை. (1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

64. 1992-93 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆண்டுக் கணக்குகள். (1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (ஆங்கிலம்).

65. 1992-93 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் கணக்குகள் மீதான தணிக்கை அறிக்கை. (1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (ஆங்கிலம்).

66. 1991-92 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு அரசுப் பண்ணைகள் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

[திரு. துரை ராமசாமி] [1994 மார்ச் 29

67. 1992-93 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் இருபத்தெட்டாவது ஆண்டறிக்கை.(1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

68. 1992-93 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் பத்தொன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

69. 1992-93 ஆம் ஆண்டிற்கான பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு நிறுவனத்தின் ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

70. 1992-93 ஆம் ஆண்டிற்கான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகத்தின் முதலாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

71. 1992-93 ஆம் ஆண்டிற்கான பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் இருபத்திரண்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்

39. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்து மூன்றாவது அறிக்கை, 1993-94.

40. பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று ஐம்பத்து நான்காவது அறிக்கை, 1993-94.

41. 1993-94 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்).

42. 1993-94 ஆம் ஆண்டு கூடுதல் மானியக் கோரிக்கைகளின் அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்).

43. 1993-94 ஆம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து நிதி அமைச்சர், மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்).